# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 41 International Editor : MICHAEL W.SMITH இதழ் - 41


## பத்தாவது ஆண்டு விழா சிறப்பிதழ்

## மாறாத சத்தியம்

நமது காஸ்பெல் ட்ரூத் வெளியீடானது கடந்த 10 ஆண்டுகளாக அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டு வருகிறது. முதல் பதிப்பானது ஜூலை 2012 இல் அச்சிடப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில் இந்த சமுதாயத்தில் பல மாற்றங்களும், மாறுதலான நிகழ்வுகளும் நடந்துவிட்டன. பல்வேறு தரப்பட்ட சூறாவளி புயல்கள், பூமியதிர்ச்சி, சுனாமி பேராபத்துகள் உலகம் முழுவதிலும் உள்ள பல நாடுகளில் பல மில்லியன் டாலர் இழப்புகளையும், மனித உயிர்களின் இழப்பையும் இந்த உலகம் கண்டது. பசியினால் பல இடங்களில் ஜனங்கள் மடிந்து கொண்டிருக்கின்றனர். மேலும் மிகக் கொடியதாக கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட பெருந்தொற்று உலகம் முழுவதிலும் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தையே புரட்டி போட்டதுடன் ஆறு மில்லியனுக்கும் அதிகமான ஜனங்கள் இந்த பெருந்தொற்றினால் பலியாகியுள்ளனர்.




நல்லொழுக்கம் என்பது சமூகத்தில் குறைந்து கொண்டே போகிறது. இதற்கு ஆதாரமாக பெரிய அளவில் சமூக வலைத்தளங்கள், ஊடகங்கள், பள்ளிகள் மற்றும் சமுதாயத்தில் பலராலும் அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கமற்ற சீர்கேடான காரியம் தான் ( LGBT ) ஓரினச்சேர்க்கை இரு பாலினத்தவர், லெஸ்பியன் மற்றும் திருநங்கைகளுக்கு ஆதரவாக மசோதாக்கள் உலக நாடுகளில் அரங்கேறி வருகிறது. இப்படிப்பட்ட இருளான காரியங்கள் உலகத்தை மாற்றிக் கொண்டே இருக்கிறது. பணவீக்கம் உயர்வு, வட்டி விகிதம் அதிகரிப்பு, எரிபொருள் விலை ராக்கெட் வேகத்தில் உயர்ந்து வருகிறதும் இவ்வுலகின் மாற்றத்தில் பங்குள்ளது. இவற்றின் மத்தியில் நன்மையான, போற்றத்தக்கதான ஒரு காரியம் என்னவெனில் கர்த்தரும் அவருடைய வார்த்தையும் என்றும் மாறாது. நான் கர்த்தர், நான் மாறாதவர்(மல்கியா 3 : 6). நம்மைச் சுற்றி நடக்கும் விஷயங்கள் மாறினாலும் பரவாயில்லை. ஏனெனில் நம் கர்த்தர் நிலையானவர். நமது காஸ்பெல் ட்ரூத் இதழானது பத்தாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருப்பது தேவனுடைய பெரிய ஆசீர்வாதம். கடந்த 10 ஆண்டுகளில் காஸ்பெல் ட்ரூத் இதழில் வெளியிடப்பட்டு உலகமெங்கும் விநியோகிக்கப்பட்ட தேவனுடைய சத்தியம் ஒருபோதும் மாறவில்லை. புல் உலர்ந்து பூ உதிரும். நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் (ஏசாயா 40 : 8). அரசாங்கம் மாறுகிறது. ஊழியங்கள் வருகிறது. போகிறது. தத்துவங்களும், சித்தாந்தங்களும் எழும் அல்லது விழும்.ஆனால் சத்தியம் என்றும் நிலைத்து நிற்கும். இயேசு கூறுகிறார், நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 14 : 6). இயேசுவின் வழி ஒன்று மட்டுமே நம்மை பரலோகத்தில் கொண்டுபோய் சேர்க்கும் தெளிவான பாதை. தேவனுக்காய் வாழ வாஞ்சிக்கும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும், ஒவ்வொரு தேவபிள்ளைகளுக்கும் பிரகாசமான எதிர்காலம் உண்டு. இயேசுவின் இரத்தத்தின் வல்லமை குறைந்து போகவில்லை. இன்றும் பாவ அடிமைத்தனத்தில் இருக்கும் ஆத்துமாக்களுக்கு, தேவ சத்தியமானது விடுதலையை கொண்டு வருகிறது.

தேவனை துதியுங்கள். தேவ கிருபையினாலே நாம் பாவத்தின் வல்லமையை மேற்கொண்டு பரிசுத்தமாய் வாழ அவரே துணை செய்கிறார். உலகத்திலே கலக்கமும், கொந்தளிப்பும், நேரிட்டாலும் தேவனுடைய வார்த்தையை நினைவு கூறுங்கள். என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். (யோவான் 16 : 33). உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக (யோவான் 14 : 27). உலகத்தின் உபத்திரவங்களினாலும், சூழ்நிலை மாற்றங்களினாலும் என்றும் மாறாமல், நம்முடைய காஸ்பெல் ட்ரூத் இதழானது வெளியிடப்பட்டுக் கொண்டு இருக்கிறது.- ஆம் மாறாத தேவ சத்தியத்தையே நாங்கள் அறிவிக்கிறோம்.



**கடந்த 10 ஆண்டுகளில் காஸ்பெல் ட்ரூத் இதழில் வெளியிடப்பட்டு உலகமெங்கும் விநியோகிக்கப்பட்ட தேவனுடைய சத்தியம்**


| | | | | |
|---|---|---|---|---|
| இணையம் மற்றும் செயலி தகவல் 2 | தலையங்கம் 3<br>வெளியீடுகளின் தலைப்புகள் 4 | காஸ்பெல் ட்ரூத் ஆசிரியர் 5<br>போட்டோ காட்சிகள் 6 | ஆய்வு அறிக்கைகள் 7 | உங்களுக்கு தெரியுமா? கடந்து வந்ததின் மேற்கோள்கள் 8 |

# வேதாகமம்,



## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

## இணையதளத்தை பார்க்கவும்

**www.thegospeltruth.org**



காஸ்பெல் ட்ரூத் இணையதளமானது 7 உலக மொழிகளில் பதிப்புகளின் இதழ்களை கொண்டுள்ளது. தமிழ், ஆங்கிலம்,ஸ்பானிஷ், ஜெர்மன், ஸ்வகிலி, சிசிவா, மலையாளம். ஒவ்வொரு இதழின் தலைப்புகளும் வெவ்வேறான கோட்பாடுகளை உள்ளடக்கியது.

அவைகள் உங்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட வேதாகம வழிகாட்டியாகவும், வேதாகம பள்ளி பாடத் திட்டங்களாகவும், பொதுவான வேதாகம குறிப்பேடாகவும் பயன்படுகின்றது. நீங்கள் காஸ்பெல் ட்ரூத் பிடிஎப் (PDF) பைலை படிப்பதற்கு வசதியாக கண்ட்ரோல் பிளஸ் Ctrl+ F உபயோகித்து தேடலாம். ஒவ்வொரு பாடங்களும் தனித் தனியே பிரத்தியேகமாக கொடுக்கப்பட்டுள்ளது .

**இணையத்தில் பதிவு செய்து கொள்வீர்களானால் அடுத்தடுத்த இதழ்கள் வெளியிடப்படும் போது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு நேரடியாக உங்களது இன்பாக்ஸில் இதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம்.**

## செயலியை பதிவிறக்கவும்

கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து

அண்ட்ராய்டு மொபைல் போன் பயன்பாட்டாளர்களுக்கென பிரத்தியேகமாக நமது காஸ்பெல் ட்ரூத் செயலி, தலைப்புகள் மற்றும் வார்த்தைகளின் மூலம் தேடும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஸ்பானிஷ் பதிப்புக்கான செயலியின் வேலை நடந்து கொண்டிருக்கிறது.




*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*

**ஆயர். W.S. வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227, சர்ச் தெரு,**
**கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று – அப்போ 13 : 49.
உலகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் சென்று சேரவேண்டும் என்பதே எங்களுடைய வாஞ்சையும் ஜெபமுமாக இருக்கிறது. மனுஷனுடைய ஆலோசனைகளோ அல்லது மதமோ, ஏக்கம் நிறைந்த ஒரு ஆத்துமாவை என்றுமே திருப்திப்படுத்தாது. தேவசத்தியத்தை குறித்த களங்கமற்ற பரிசுத்தமான போதனைகளும், கொள்கைகளும் இன்று ஜனங்களுக்கு தேவையாயிருக்கிறது.

10 வருடங்களாக காஸ்பெல் ட்ரூத் இதழானது தடையின்றி வெளியிடப்பட்டு வருவதினால் தேவனுக்கு மிகுந்த நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம். அது எளிதான காரியமோ அல்லது வசதியானதோ அல்ல. மாறாக, கர்த்தருடைய பணி என்பது வசதியானதை குறித்ததல்ல, தேவனுடைய அழைப்பை பெற்று அவருடைய வாஞ்சையை நிறைவேற்றுவதே. மிஷனரி இயக்கத்தில் 25 வருடங்களுக்கு முன்பதாக கொள்கை சார்ந்த போதனைகள் தேவையாக இருந்ததை என்னால் நினைவுகூற முடிகிறது. ஆனால் அதன் பின்பு பல ஆண்டுகள் கழித்துதான் கர்த்தர் இந்த பத்திரிகை ஊழியத்தின் பொறுப்பை எங்களுக்குத் தந்தார்.

ஜூலை 2012 இல் வெளிவந்த முதல் இதழின் தலையங்கம் பகுதியை குறித்து பார்க்கலாம் :

உலகம் முழுவதிலுமான பல ஆண்டுகளான ஊழியப் பயணத்தில் தேவ வார்த்தையின் சத்தியத்திற்கான தேவையை உணர்ந்தேன்.இது பலரை ஒன்றாகக் கூட்டி இணைக்கும் முயற்சியோ அல்லது நம்மை பின்பற்றுகிறவர்களை அதிகரிக்க செய்யும் திட்டமோ இல்லை. அவரவர் வாழும் பகுதியில், அவர்கள் அங்கம் வகிக்கும் சபையில், அவர்களை உற்சாகப்படுத்தி போதிப்பதே. சத்தியத்தில் நடக்கும்போது தேவனுடைய பரிசுத்த ஆவியால் அவர்களுக்குள் ஐக்கியம் வந்துவிடும். அடிப்படையான வேத சத்தியங்களை எழுதப்பட்ட இந்த இதழின் வாயிலாக உங்களுக்கு கொண்டுவந்து சேர்ப்பது எனக்கும் என் மனைவிக்கும் வாஞ்சை. நேர்மையான இதயங்களில் இந்த சத்தியம் நிலைத்து நிற்கும்.

10 ஆண்டுகளாக காஸ்பெல் ட்ரூத் இதழானது காலாண்டிதழாக வெளியிடப்பட்டு வருகிறது. அநேக உதவி செய்கிற நல்ல உள்ளங்களையும், தன்னார்வலர்களையும் கர்த்தர் இந்த ஊழியத்தில் கொடுத்திருக்கிறார். உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அநேகமாயிரம் ஜனங்களை இந்த இதழ் சென்றடைய இவர்கள் யாவருடைய முயற்சியுமே காரணம். பொருளாதாரம் மற்றும் ஜெபங்களினால் தாங்குகிற ஒவ்வொருவருக்கும் மிகுந்த நன்றி கூறுகிறோம்.இந்த இதழ் மாதந்தோறும் வெளிவர ஜெபியுங்கள்.

10 ஆண்டுகளை கடந்து, அடுத்த ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நமது காஸ்பெல் ட்ரூத் இதழானது இன்னும் அதிகமான ஜனங்களை அபிஷேகித்து நடத்தவும், உற்சாகப் படுத்தவுமே விரும்புகிறேன். ஒவ்வொரு உள்ளங்களிலும் கிறிஸ்துவும் அவருடைய ராஜ்யமும் நிலைத்திருக்க வேண்டும். இன்னும் அநேக வாசல்களைக் கர்த்தர் திறந்து, ஆவலுள்ள, தவனமுள்ள ஆத்துமாக்களின் தாகம் தீர்க்கப்பட வாஞ்சிக்கிறேன்.


ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org

பதிவுசெய்து
வெளியீட்டு
காப்பகங்களுக்குள்
உள்நுழைக


## பயணத்தில் உடன் இருப்பவர்கள்

கடந்த 5 ஆண்டுகளாக காஸ்பெல் ட்ரூத் இதழானது ஆசியா பசிபிக் பகுதியில் தமிழ் மொழி பேசும் மக்கள் மத்தியில் அபரிவிதமான ஆசீர்வாதமாக முன்னேற்றம் கண்டுள்ளது. நமது மிஷனரி பயணத்தில் நாம் சென்று சேராத அநேக இடங்களுக்கு நமது இதழானது சென்றடைகிறது. கிறிஸ்தவத்திற்கு எதிரான பகுதிகளிலேயே ஆண்டு முழுவதும் பயணிக்கிறது. இப்படிதான் தமிழ் வெளியீட்டை ஆரம்பித்தோம். முதலில் 500, பிரதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக 1000, 2000 இப்போது 3500 பிரதிகள் ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த தமிழ் பிரதிகள் சென்றடையும் பல ஜனங்களிடம் இருந்து அழைப்புகளும், கடிதங்களும் வருகிறது. இப்படி 75000 பிரதிகள் இதுவரை அச்சிடப்பட்டு ஒவ்வொருவரையும் சென்றடைந்து இருக்கிறது. மிஷனரி பணித்தளங்களில் இந்த சுவிசேஷ விதைகள் வளர்ந்து இருப்பதற்கு நானே சாட்சி .
ஆண்டு முழுவதும் நாம் பணித்தளத்தில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தேவன் இதை கவனித்து கொள்வார்.
டிஜிட்டல் முறையிலான தரவுகளும் தொகுப்புகளும் எனக்கு பணித்தளங்களில் மிகவும் உதவியாக இருந்தது. உங்களில் இருக்கின்ற நம்பிக்கை குறித்து உங்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்(1 பேது 3 : 15). இந்த பயணத்தில் காஸ்பெல் ட்ரூத் உங்களுக்கு மிகவும் உதவியாக இருந்திருக்கும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

சகோதரர் – கிளிண்டன் ஜேம்ஸ்

# காஸ்பெல் ட்ரூத் இதழ்களின் தொகுப்பு

அனைத்து இதழ்களின் தகவல்களும் நமது www.thegospeltruth.org என்ற இணையத்தில் ஏழு மொழிகளிலும் காணப்படுகின்றது.




1. சுவிசேஷம், சத்தியம், உண்மை
2. இரட்சிப்பு, பாவம்
3. அன்பின் ஐக்கியம்
4. தேவ இராஜ்ஜியம்
5. காலயியல் – கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, கடைசி காலம்
6. தேவ சபை
7. தொலைக்காட்சி, வலைதளங்களின் தாக்கம்
8. பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்
9. அந்நியபாஷை பேசுதல்
10. ஞானஸ்நானம்
11. பாதங்கழுவுதல் : தாழ்மை
12. கிறிஸ்துவின் ஆவல் – இராப்போஜனம்
13. சுயநீதி
14. விவாகரத்தும் மறுமணமும்
15. ஈகை
16. வெளித்தோற்றம் – கிறிஸ்தவ உடை
17. ஊழியம்
18. இரண்டு உடன்படிக்கைகள்
19 வேதாகம தசமபாகமும் கொடுத்தலும்
20. ஓய்வுநாள், கர்த்தருடைய நாள்
21. ஆராதனையில் இசை
22. திரித்துவ தேவன்
23. ஆவிக்குரிய சுய பரிசோதனை
24. தெய்வீக சுகமாகுதல்
25. உபவாசம்
26. வேதாகம எதிர்ப்பு, இராணுவ சேவை
27. உக்கிராணத்துவம்
28. நித்திய பாதுகாப்பு
29. முதல் மற்றும் இரண்டாம் மரணம், உயிர்த்தெழுதல்
30. துதி
31. ஜெபம்
32. கொரானா-19 (சிறப்பு இதழ்)
33. ஊழிய அபிஷேகம்
34. மூப்பரின் அலுவல்கள்
35. இவ்வுலகத்திற்குரியதல்ல
36. சோதனையின் நேரங்களில்
37. உவமையின் வல்லமை
38. வேதாகம மனந்திரும்புதல்
39. நேர்மை
40. தேவசித்தம் அறிந்து கொள்வதெப்படி



ஆங்கிலம் ஸ்பானிஷ் ஜெர்மன் தமிழ் சிச்சிவா ஸ்வாகிலி மலையாளம்

## காட்சிகளுக்கு பின்னால்

**காஸ்பெல் ட்ரூத் வெளியீட்டாளர்கள் குழு**

பல ஆண்டுகளாக நமது காஸ்பெல் ட்ருத் இதழ் வெளியிடும்படியாக தங்களுடைய தியாகத்தை செலுத்தி வருகிற நமது குழு உறுப்பினர்கள் யாவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள். ஒருவர் அவர்தம் நாவினால் சுவிசேஷ நற்செய்தியை வாசிப்பதின் இனிமை வேறு எதிலும் இல்லை. அர்ப்பணிப்புள்ள, பணியாளர்களைக் கொண்டு மிகுந்த முயற்சியோடு இணைய பிரதிகளும் வெளியிடப்படுகின்றன. ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டதும், நமது மொழி பெயர்ப்பாளர்கள் அவர்களுடைய மொழிபெயர்ப்பினை தொடங்கி, உலகம் முழுவதும் அனுப்ப தயாராகிவிடுவார்கள். அவரவர் பகுதிகளில் அச்சகத்தார் சிறந்த முறையில் உலகளாவிய இந்த பத்திரிகை அச்சிட மிகவும் உறுதுணையாக இருக்கின்றனர். புதிய மொழிகளுக்கான கோரிக்கைகளும் தொடர்ந்து எங்களுக்கு வந்து கொண்டே தான் இருக்கின்றது. ஆனாலும் நேரம், பணியாளர்கள், பொருளாதார தேவைகளின் நிமித்தம் அவை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நன்றி நிறைந்த நம் ஊழியர்களுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.





மைக்கேல் ஸ்மித்
முதன்மை ஆசிரியர்
(அமெரிக்கா)



ரேணி ஸ்மித்
வடிவமைப்பு ஆசிரியர்
(அமெரிக்கா)



அன்பெரி
வெளிநாட்டு வடிவமைப்பு
(அமெரிக்கா)



ஜுலி எல்வெல்
பிழை திருத்துபவர்
(அமெரிக்கா)



ஜெனட் மைக்குரின்
பிழை திருத்துபவர்
(அமெரிக்கா)



லேனி சொரில்
இணையதளம்
(அமெரிக்கா)



இர்மா சாலி
பிழை திருத்துபவர்
(அமெரிக்கா)



டேமன் சாலி
செயலி வடிவமைப்பு
(அமெரிக்கா)



வன்னிஸா ஸ்மித்
அஞ்சல் பிரிவு
(அமெரிக்கா)



டெரிசா பெல்
ஸ்பானிஷ் மொழி பெயர்ப்பாளர்
(அமெரிக்கா)



அட்ரியன் கிளட்ஸ்
ஸ்பானிஷ்,பிழை திருத்துபவர்
(மெக்ஸிகோ)



அரியல் பெரிஸ்
ஸ்பானிஷ் பிழை திருத்துபவர்
(மெக்ஸிகோ)



இலூட் லுகேர்ட்
ஜெர்மன் மொழிபெயர்பாளர்
(ஜெர்மன்)



பர்த் நாவாச்சுகுவா
பிரிண்டர்
(நைஜிரியா)



டபுள்யூ.எஸ்.வேதா
ஆசிரியர் (தமிழ்),
வெளியிடுபவர், (இந்தியா)



ஞானராஜன்
ஒருங்கிணைப்பாளர்
(இந்தியா)



செல்வம்
அஞ்சல் துறை
(இந்தியா)



சாம் கிருபாகரன்
மேலாளர்
(இந்தியா)



ஸ்டீபன் மவான்ஹி
ஸ்வாகிலி மொழிபெயர்பாளர்
(கென்யா)



ஆலிஸ் அகூகா
ஸ்வாகிலி
பிரிண்டர், (கென்யா)



பாலிஸ்தானி ஹன்சிலங்கா
மொழிபெயர்பாளர்
பிரிண்டர், (சிச்சிவா)



மத்தேயு ஜோசப்
ஆசிரியர் (மலையாளம்),
பிழை திருத்துபவர், (கேரளா)




பேபி மத்தேயு
மொழிபெயர்பாளர்,
(மலையாளம், கேரளா)



பிஜு ஜே. வர்கீஸ்
ஒருங்கிணைப்பாளர்
மலையாளம், (கேரளா)

# 10 ஆண்டுகளாக தேவன் பெயரிலுள்ள விசுவாசம்

நாங்கள் அச்சிட ஆரம்பித்தது ஒரு சிறிய பிரிண்டரில் எங்களது சாப்பாட்டு அறை மேஜைமீது வைத்துதான். கிட்டத்தட்ட 12 மணி நேரமாக கவனமாக அந்த வேலையை செய்தோம், தற்போது இப்பணி உலகமெங்கும் பெரிதும் வளர்ந்துள்ளது.













ஆண்டவர்
வசனம் தந்தார்; அதைப்
பிரசித்தப்படுத்துகிறவர்களின்
கூட்டம் பெரிது.
சங் 68 : 11
























# இனிய பிறந்தநாள் காஸ்பெல் ட்ரூத் இதழே



இனிய பிறந்தநாள் காஸ்பெல் ட்ரூத்
இதழே! இதன்மூலம் தொடப்பட்ட
ஜனங்கள் அனேநகம் ஆயிரம்பேர்.
இன்டர்நெட் வசதி கிடைக்காத பல
கிராமங்களில் கூட இந்த இதழ்
கிடைக்கப்பெறுகிறது. விரிவான
விளக்கத்துடன் 5,000 முதல் 7,000
பேர் வாசிக்கும்படி பயனளிக்கிறது.
தேவசபையின் கோட்பாடுகளை
இன்னும் அதிகமாக தெரிந்து கொள்ள
ஜனங்கள் வாஞ்சித்து கேட்பதுண்டு
எல்லை தாண்டி, கடல் தாண்டி
சத்தியங்கள் ஜனங்களை சென்றடைய
ஜெபிக்கிறோம். பல்லாண்டு வாழ்க.

பீட்டர் அக்வேயோனா,கென்யா

10 ஆண்டுகளாக காஸ்பெல் ட்ரூத் இதழ் அச்சிடப்பட்டு
வருவதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.
ஆரம்ப நாட்கள் முதற்கொண்டே சுவிசேஷ
வேலைகளுக்கும், வேத பாடங்களுக்கும் ஏற்ற இதழாக
இது இருந்து வருகிறது. இந்த இதழின் வாயிலாக
எங்களுடைய சுவிசேஷம் முழுமை அடைந்ததாக
நாங்கள் நம்புகிறோம் .

சின்வண்டு நவாச்சுகுவு, நைஜீரியா

காஸ்பெல் ட்ரூத் என்னும் தேவ திட்டத்திற்காக தேவனுக்கு நன்றி
செலுத்துகிறேன். வேதத்தை வாசிப்பதோடு கூட வசனங்களை
தியானிப்பதற்கு உதவியாய் இருக்கிறது. வேதாகமம் இல்லாத
அநேகருக்கு இந்த இதழில் உள்ள தேவனுடைய வசனங்கள்
தியானிப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. சபையின் அங்கத்தினர் ஒவ்வொரு
வருடைய இதயத்திலும் இந்த இதழ் நீங்கா இடம்பெற்றுள்ளது. மலாவி,
மொசாம்பி பகுதிகளில் இன்னும் தேவசத்தியம் பரவ இதன் மூலம்
ஜெபியுங்கள்.

பாஸ்டர் கஸ்டர் மலாவி

சீக்கிரமாக நாம் பத்தாவது ஆண்டை கடந்துவிட்டோம். 500 பிரதிகளில்
ஆரம்பித்து படிப்படியாக ஆயிரம் இரண்டாயிரம் என பரிசுத்தவான்களின்
ஆதரவினால் தற்போது 35000 பிரதிகளை அச்சிடுகிறோம். இது
கர்த்தரின் சுத்த கிருபை.
குறிப்பாக நமது சபை ஊழியர்கள் ஞாயிறு ஆராதனை பிரசங்கத்திற்கு
நமது காஸ்பெல் ட்ரூத் செய்திகளை உபயோகிக்கின்றனர். ஆகவே
கேட்கிற பல்லாயிரக்கணக்கான விசுவாசிகளை இந்த செய்தி
சென்றடைகிறது. இப்படியாக இந்தியாவில் அநேக ஊழியர்களுக்கு
நமது இதழ் அனுப்பப்படுகிறது.
தமிழ்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, நமது இதழ்
உலகமெங்கும் உள்ள தமிழ் மக்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது,
படிப்படியாக முன்னேறி உலகம் முழுவதும் உள்ள இன்னும் பல ஆயிரம்
ஜனங்களை சுவிசேஷ சத்தியம் சென்றடைய தேவனை
பிரார்த்திக்கிறேன்.

ஆயர்.வேதா ( ஆசிரியர் ) இந்தியா

காஸ்பெல் ட்ரூத் வெளியிட இம்மட்டும் கிருபை தந்த தேவனுக்கு மனதார நன்றி
செலுத்துகிறேன். இந்த இதழ் வெளியிட ஆரம்பித்த போது சத்தியங்கள்
எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக பரிசுத்தவான்களிடம் ஒப்படைத்தது போல
உணர்ந்தோம். உதாரணமாக ஒரு சில நிமிடங்களிலே இதன் சத்தியத்தை
முழுவதுமாக புரிந்து கொள்ள கூடும்.
இது ஒரு கையடக்கமான வேத குறிப்பேடு எனலாம். மேலும் தேவசபை
ஜனங்களுக்கு இந்த இதழ் கொடுக்கப்படுவதோடு அல்லாமல் மிக முக்கியமாக
சுவிசேஷ வேலைக்கு என்று உபயோகிக்கப்படுகிறது. நம்மை நேரில் சந்திக்கும்
நபர்களுக்கோ, வீடுகளுக்கோ, தெருக்களிலோ சுவிசேஷத்தை அறிவிக்கும்
விதமாக பரவலாக இதை நாம் கொடுக்கிறோம்.
ஆற்றோரத்தில் தோம்பியா பகுதியில் கடந்த வாரம் சுவிசேஷம் அறிவிக்க கூட
இதை நாங்கள் பயன்படுத்தினோம். மேலும் வேதபாட வகுப்புகள், ஞாயிறு
பாடசாலை, அடக்க ஆராதனை, திருமண நிகழ்ச்சிகளில் இதை பயன்படுத்தி
வருகிறோம். இதன் எல்லா பதிப்புகளையும் சேர்த்து புத்தகமாக்கி 5
ஊழியர்களுக்கு கொடுத்துள்ளோம். இந்த எழுப்புதல் எங்கும் பரவட்டும்.

சகோதரர். பார்த் சி.என்., நைஜீரியா

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section

TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

உங்களுக்குத் தெரியுமா?


சுமார் 17,400 மக்கள் இனங்கள் உலகத்தில் உள்ளனர். 42.1 % பேர் இன்னும் சுவிசேஷம் அறிவிக்கப்படாமல் சந்திக்கப்படாமல் உள்ளனர். இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய 3 ஆம் உலக நாடுகளும் அதிகம் சந்திக்கப்படாத மக்கள் இனங்களைக் கொண்டது. கிறிஸ்துவை அறியாத ஜனங்கள் வரலாற்றிலே இருந்து கொண்டே இருக்கிறார்கள்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## கடந்து வந்ததிலிருந்து சில மேற்கோள்கள்

இயேசு கிறிஸ்துவின் வல்லமையால் ஒருவர் இரட்சிக்கப்படுவது உண்மையிலே அதிசயமானது. ஒரு கிறிஸ்தவர் இயேசு கிறிஸ்துவின் சீடர் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி பாவஞ்செய்யாமல் வாழ்பவரே (1பேது 2 : 21-22).அநீதியின் பாதையில் நடக்கிற உலகத்தார் இந்த சத்தியத்தை விட்டு விடுகிறார்கள்.

*பதிப்பு 2 பாவமும் இரட்சிப்பும்*



பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவது என்பது உணர்ச்சியினாலோ, வேறெவ்விதத்தினாலோ உண்டாகாது. பரிசுத்தமான வாழ்வு வாழ்வதே பரிசுத்த ஆவியைப் பெற்று வாழும் வல்லமையை உணர்த்துவது

*பதிப்பு 8, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவது*

சாட்சிகள், பாடல்கள் வாயிலாக தேவபிரசன்னத்தோடு தேவனை துதிக்கப் பழக வேண்டும்.ஏனெனில் நம் தேவன் துதிகளுக்குள் வாசம் செய்கிறவர்

*-பதிப்பு 30, துதி*

மரணம் எனும் சாபம் இருவிதமானது.ஆவிக்குரிய மற்றும் மாம்சீமானது. ஆவிக்குரிய மரணம் இயேசு கிறிஸ்துவின் மன்னிப்பினால் மாற்றியமைக்கப்பட்டது.

*பதிப்பு 29 முதல் மற்றும் இரண்டாம் மரணமும் உயிர்த்தெழுதலும்*

தேவனுடைய உக்கிராணக்காரனாகிய நாம், நம்முடைய பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துவதிலும், நிர்வகிப்பதிலும் கவனம் செலுத்தி, ஆவிக்குரிய விஷயங்களில் உண்மையாயிருக்க கடவோம்.

*பதிப்பு 27 பொருளாதாரம்*

தேவனுடைய கிருபையை சார்ந்து வாழும் தேவ பிள்ளைகளுக்கும், தேவன் அபிஷேகித்த இறையியல் அரசாங்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் நிறைய வித்தியாசமுண்டு.

*பதிப்பு 26 வேதாகம எதிர்ப்பு*

தற்பரிசோதனை செய்யாமல் வாழும் ஒருவர் மாயைக்கு உட்படுகின்றார்.தேவ வார்த்தையை கேட்பதோடு வஞ்சிக்கப்படாமல் அதன்படி செய்கிறவர்களாயுமிருங்கள்

*பதிப்பு 23, ஆவிக்குரிய சுயபரிசோதனை*

உண்மையான கிறிஸ்தவர்களுக்கு புதிய ஏற்பாட்டில் ஓய்வுநாள் என்பது சமாதானம், இளைப்பாறுதல், ஆவிக்குரிய ஆராதனை மற்றும் ஒவ்வொரு நாளும் பரிசுத்தமாய் வாழ்வதை குறிக்கும். ஒவ்வொரு நாளும் பாவமன்னிப்பின் விடுதலையை இயேசு கிறிஸ்துவின் மூலம் பெற்றதை நினைவு கூறுதலும், அர்ப்பணிப்பும் பரிசுத்தமும் உள்ள நாட்கள்

*பதிப்பு 20,ஓய்வு நாள்*

நம்முடைய விருப்பங்களுக்கேற்ப கர்த்தர் கிரியை செய்யவேண்டும் என்று எல்லா காரியத்திலேயும் எதிர்பார்க்காமல், கீழ்ப்படிதலுள்ளவர்களாக நடக்கவேண்டும்

*பதிப்பு 40 தேவசித்தம் அறிந்து கொள்வது எப்படி*

CONTACT :-

**The Editor,**
**Gospel Truth,**
**P.O. Box - 54**
**Pollachi Town**
**INDIA - 642 001.**

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Cell : 95975 62641.

Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan

Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316